சேகரித்து உடனடியாக 90 கோடி ரூபாய்க்கு செலவு செய்தால் அந்த குறைந்த பட்சத் தேவையை தீர்வு செய்ய முடியும் என்று அதிகாரிகள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை செலவு செய்கிற நிலையில் நாம் இல்லையென்றாலும் கடன் கிடைத்தால் அந்த தொகையை செலவு செய்வதற்கு முடியும் என்று கருதி கடன் தரக்கூடிய நிறுவனங்களை நாம் அணுகியிருக்கிறோம். மத்திய அரசினுடைய ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் தக்க முடிவு எடுப்பார்களானால், இந்த பிரச்னை எளிதாக முடியும்.

விருத்தாசலம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் செயல்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம்

*வினா எண் 409.—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் 105 பள்ளிகளில் மதிய உணவு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்ததை ஜூன் 18 ஆம் தேதி முதல் 48 பள்ளிகளுக்கு மட்டும் வழங்கப்படுவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

(இ) தற்போது அளிக்கப்படும் உணவு மிகவும் குறைவாக உள்ளது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கடுமையான வறட்சியின் காரணமாக விருத்தாசலம் மத்திய சமையற்கூடத்தில் தண்ணீர் இல்லை. வெளியார் பம்பு செட்டிலிருந்து தண்ணீர் பெறுவதற்கும் சிரமங்கள் ஏற்பட்டன. சமையற்கூட ஊர்திகளில் ஒன்று பழுதாகி மாற்று ஏற்பாடாக மாட்டு வண்டி, சைக்கிள் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யச் சற்று தாமதம் ஏற்பட்டது. ஆயினும் இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட்டு இப்பொழுது 1981 ஆகஸ்டு மாதம் முதல் 105 பள்ளிகளுக்கும் தொடர்ந்து உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) இந்தியா முழுவதும் நண்பகல் உணவுத் திட்டங்களுக்கு கேர் நிறுவனம் அளித்து வந்த இலவச உணவுப் பொருளை இந்த ஆண்டு கணிசமான அளவுக்குக் கேர் நிறுவனம் குறைத்ததன் காரணமாக உணவின் அளவை ஓரளவு குறைக்க நேரிட்டுள்ளது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதிய உணவு கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் அங்கு சமையல் செய்வதற்கு ஆள் இல்லாமல் தலைமை ஆசிரியர் தவறு செய்வதும், அங்கு ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்கள் கேர் உதவியை

பெற போய்விட்டால் பள்ளிகள் நல்லமுறையில் நடப்பதில்லை. ஆகவே எதிர் காலத்திலாவது தனிப்பட்டவர்களை வைத்து சமைக்கிற நிலையை உண்டாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி விருத்தாசலம் பற்றியது. தென்னார்க்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சமையல் கூடங்களை வைத்து மதிய உணவை தந்துகொண்டு வருகிறோம். ஆகவே அங்கே தவறு நேர இடமிருக்காது.

திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட தனியார் கடன்கள்

* வினா எண் 410.—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தங்களது தனியார் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை பேர்களது கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டன ?

(இ) எத்தனை பேர்களது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 2,794.

(ஆ) 28.

(இ) 2,489.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணம் கோருபவர்களின் வருமானத்தை முடிவு செய்வதில் பல கோளாறுகள் எற்படுகின்றன. திண்டிவனம் வட்டம் விடூர் என்ற கிராமத்தில் அரிசன காலனியில் வசிக்கும் ஏழுமலை என்பவருக்கு 65 சென்ட் தான் புஞ்சை நிலம் இருக்கிறது. கடன் நிவாரண சட்டத்தின் கீழ் அவருக்கு அந்த உதவியை தரமுடியாது என்று உதவி ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டிற்கு அவருக்கு வசதியில்லை. இதுபோன்ற கோளாறுகள் ஏற்படாத வண்ணம் இருப்பதற்கு அரசு இதை பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS